# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத் துறை
## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை
## பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (06.05.2026 முதல் 10.05.2026)

**அறிக்கை எண் 10/2026** **தேதி. 05.05.2026**

### பெரம்பலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரம்பலூர் மாவட்டத்தின் 30.04.2026 முதல் 04.05.2026 வரையிலும் பகல் நேரவெப்பநிலை 37 - 41 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 23 - 29 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 67 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 - 36 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென் கிழக்கு திசை வரை பதிவானது.

### எதிர்பார்க்கப்படும் வானிலை பெரம்பலூர் (06.05.2026 முதல் 10.05.2026)

| கடந்த வார வானிலை (30.04.2026 முதல் 04.05.2026) | | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 10.05.2026 - 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 30/04 | நாள்-2 01/05 | நாள்-3 02/05 | நாள்-4 03/05 | நாள்-5 04/05 | தேதி | நாள்-1 06/05 | நாள்-2 07/05 | நாள்-3 08/05 | நாள்-4 09/05 | நாள்-5 10/05 |
| 0.0 | 0.0 | 0.0 | 7.8 | 0.0 | மழை (மி.மீ) | 4 | 2 | 2 | 3 | 7 |
| 40 | 41 | 40 | 41 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 39 | 39 | 38 | 38 | 38 |
| 28 | 29 | 27 | 23 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 28 | 28 | 27 | 27 | 27 |
| 3 | 6 | 4 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 4 | 5 | 4 | 6 |
| 64 | 60 | 59 | 67 | 65 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 80 | 70 | 70 |
| 51 | 41 | 43 | 60 | 42 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 30 | 40 | 50 | 50 |
| 22 | 28 | 4 | 36 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 12 | 10 | 8 | 10 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | வடக்கு | கிழக்கு | தெற்கு | காற்றுவீசும் திசை | கிழக்கு தென் கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

### பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 06.05.2026 முதல் 10.05.2026 ஆகிய தினங்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 38 - 39 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 8 - 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும். |
| **நெல்** | **நாற்றாங்கால்** | கோடை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஜிப்சமும் ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும். |
| **நெல்** | **நடவு வயல்** | நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக தழை, மணி, சாம்பல் சத்துடன் 10 கிலோ ஜிங்சல்பேட்டும், 200 கிலோ ஜிப்சமும் இடவேண்டும். |
| **வாழை** | | வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| **கால்நடைகளுக்கு** | **ஆடு மற்றும் மாடு** | 3 மாத வயதுடைய கன்று குட்டிகள் மற்றும் 2 மாத வயதுடைய ஆட்டு குட்டிகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடவும். |
| | | காற்றின் வெப்பநிலை 35 டிகிரி செல்சியசுக்கு மேல் அதிகரிக்கும் போது கறைவை மாடுகளின் தண்ணீர் குடிக்கும் அளவு அதிகமாவதோடு உலர் பொருள் உட்கொள்ளும் அளவு குறையும். இதனால் பால் உற்பத்தி குறைய தொடங்கும். எனவே பசுந்தீவனத்துடன் புரதசத்துள்ள பசுந்தீவனங்களை கொடுக்க வேண்டும். |

## குறுஞ்செய்தி

மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும்.

**இயக்குநர்**